9. திரு. அ. வெங்கடாசலம்
10. திரு. க. சோலைராசு
11. திரு. கி. எத்திராசன்
12. திரு. துரை கிருஷ்ணமூர்த்தி
13. திரு. வி. கோ. செல்லப்பா
14. திரு. சு. திருமலைச்சாமி கவுண்டர்
15. திரு. கே. வி. வேணுகோபால்.
16. திரு. ம. ஆபிரகாம்
17. திரு. பரிதி இளம்வழுதி
18. திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்

பேரவை விதி 279 (1)-ன் கீழ், திரு. கி. எத்திராசன் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமிக்கிறேன்.

5. கவன ஈர்ப்புகள்.

(அ) சென்னை நகரில் வீட்டிற்கான மின்னிணைப்பு கொடுப்பதில் ஏற்படுகின்ற கால தாமதம் குறித்து.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''சென்னை மாநகரத்தில் வீட்டிற்கான மின் இணைப்புக் கோரி விண்ணப்பித்தவர்கள் அதற்கான முழுத் தொகையினை செலுத்தி நீண்ட நாட்களாகியும் மின் இணைப்புக் கிடைக்க போதிய மின் கேபிள்கள், மின் மீட்டர்கள் இல்லாத காரணத்தால் சென்னை மாநகர மக்களுக்கு ஏற்படுகின்ற இன்னல்கள் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :—

அறிக்கை.

மனுதாரர்கள் ஈட்டுத் தொகை செலுத்தியும் மின் இணைப்பு பெறாத வகை வீட்டு மின் இணைப்பு மனுக்கள் 7,400 சென்னை நகரில் உள்ளன. இவற்றில் 5,300 மனுக்கள் மூன்று மாதங்களுக்கு குறைவான நிலுவையில் தான் உள்ளன.

1985–86 ஆம் நிதி ஆண்டில், மின்வாரியம் 28,000 மனுதாரர்களுக்கு வீட்டு இணைப்பு கொடுத்தது.

[திரு. ச. இராமச்சந்திரன்] [1986 மே 10

நிலுவையில் இருப்பதற்கான மூல காரணம் மின் அளவிகளும் புதைவடமும் மின்வாரிய தேவைக்கு ஏற்ப கிடைக்கப் பெறாமல் இருப்பதுதான். புதைவட பற்றாக்குறைக்கு சந்தை நிலை தான் காரணம். இருப்பினும் மின் அளவிகளும் புதைவடமும் சில்லறை விற்பனைக்கும் கிடைப்பதால் மின்வாரியம் மனுதாரர்கள் மின் அளவிகளையும் புதை வடத்தையும் வாங்க அனுமதி அளித்துள்ளது. மனுதாரர்கள் வாங்கிக் கொடுத்தால் மின் இணைப்பு உடனே அளிக்கப்படுகிறது. புதைவடம் மனுதாரர்களால் கொடுக்கப்பட்டால் அவர்களிடமிருந்து பெறும் தொகையில் புதைவடத்தின் விலை குறைக்கப்படுகிறது. மின் அளவி மனுதாரர்களால் கொடுக்கப்பட்டால் மின்வாரிய ஒப்பந் தப்புள்ளியில் அனுமதிக்கப்பட்டுள்ள மின் அளவியின் விலை அவர்களுக்குத் திருப்பித் தரப்படுகிறது.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின்னிணைப்புகளைப் புதிதாகக் கொடுக்கின்ற பொழுது வாரியமே மின் மீட்டர்களை வழங்கு கின்ற முறையில் அதற்கு 121 ரூபாய் என்று நினைக்கிறேன் அந்தத் தொகையை நிர்ணயித்திருக்கிறார்கள். ஆனால் இப் பொழுது புதிதாக இணைப்பு கேட்பவர்களுக்கு மின் மீட்டர் கள் வழங்கப்படுவதில்லை. வெளியே வாங்கிக் கொள்ளுங்கள் என்று சொல்கிறார்கள். வெளியே வாங்குகின்றபொழுது 200 ரூபாய்க்கு மேல் ஆகிறது. அப்படி வாங்கிய ரசீதைக் காட்டினாலும் கூட 121 ரூபாய்தான் தருகிறார்கள். ஆகவே, ஏன் இந்தப் பாகுபாடு என்பதை அறிய விரும்புறேன். மேலும் வாரியமே மின் மீட்டர்களை வழங்குவதற்கு நடவடிக்கை, எடுக்க வேண்டும். அப்படி இல்லையென்றால் வெளியே என்ன தொகைக்கு வாங்கி அந்த பில்லைக் கொடுக்கிறார்களோ அந்தத் தொகையைச் செலுத்துவார்களா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, மின் அளவைக் கருவிகளை வாரியமே வாங்கும் முறையில், தேவைக்கு ஏற்ப கிடைக்காமல் இருக்கிறது. ஆனால் தனியார்கள் தங்களுடைய அவசரத் தேவைக்காக அதை வாங்கும் பொழுது, வாரியம் வாங்கினால் என்ன விலை பெறுமோ அந்த விலையைத்தான் வாரியம் தருவதற்கு உரிமை படைத்திருக்கிறது. அதைவிடக் கூடுதலாகத் தந்தால் அதுவே குறையாக ஆகிவிடும். ஆகவே தான் மின்வாரியம் என்ன விலையை நிர்ணயம் செய்கிறதோ அந்த விலை மட்டுமே தரப்படுகிறது.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இப்பொழுது சென்னை மாநகரத் திலே புதிய மின்னிணைப்புகள் கேட்டு வந்த விண்ணப்பங் களின் எண்ணிக்கை எவ்வளவு? அவர்களுக்கு இன்னும் எவ்வளவு காலத்தில் இந்த மின்னிணைப்புகள் வழங்கப்படும்? இந்த மின் மீட்டர்களுக்கு உண்டான தொகையை நிர்ணயிக்க

ஏற்பாடு செய்யப்படுமா? இதில் அரசால் போடப்பட்ட டெண்டர் முடிந்துவிட்டது என்றும், புதிதாக டெண்டர்கள் போடப்படவில்லை என்றும் சொல்கிறார்கள். ஆகவே, புதிய டெண்டர்களை விரைவில் அமல்படுத்தி மின் மீட்டர்கள் வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவரவர்களே, கடந்த ஆண்டு, 1985-86 ஆம் ஆண்டு பெறப்பட்ட மனுக்கள் 33,432; தரப்பட்ட மின் இணைப்புகள் 28,018. இன்னும் பழைய மனுக்களெல்லாம் சேர்ந்து மொத்தம் 11,126 மனுக்கள் தேங்கி இருக்கின்றன. இவற்றில் 7,400 மனுக்களுக்கு மட்டுமே காப்புத் தொகை அளித்திருக்கிறார்கள். மூன்று மாத அளவிற்குள் நாம் தாக்கூடிய அளவு 5,300. மீண்டும் மின் அளவைக் கருவிகளைப் பெற ஒப்பந்தப் புள்ளிகள் வரவழைக்க மின் வாரியம் நடவடிக்கை எடுக்கும்.

(ஆ) கைத்தறித் துணிகள் விற்பனைக்கு தள்ளுபடி அளிக்கும் நாட்கள் விழுக்காடு குறித்து.

(முற்பகல் 11-00)

* திரு. மு. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''கைத்தறித் துணிகளின் விற்பனைக்காக வருடத்திற்கு தள்ளுபடி (ரிபேட்) நாட்கள் 60 என்றிருந்தனத 30 நாட்களாகக் குறைத்திருப்பதாலும், தள்ளுபடித் தொகையில் மைய அரசு மற்றும் மாநில அரசு 50 விழுக்காடுகள் ஏற்றுக் கொள்ளும் என்றிருந்த நிலையை மாற்றி 25 விழுக்காடுதான் மைய அரசால் தர முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளதால், இலட்சக் கணக்கான நெசவாளர் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஆயத்தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

1982-83 ஆம் ஆண்டு வரை மத்திய அரசு ஆண்டொன்றுக்கு 30 நாட்களுக்கு சில்லறை விற்பனை மீது 20 விழுக்காடு தள்ளுபடியும், மொத்த விற்பனை மீது 15 விழுக்காடு தள்ளுபடியும் தவிர இந்தியா முழுவதும் ஆங்காங்கே மத்திய அரசால் நடத்தப் பெறும் தேசீயக் கைத்தறிக் கண்காட்சியை ஒட்டி அக்கண்காட்சியில் பங்கேற்கும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 20 சதவிகிதம் தள்ளுபடியும் அளித்து வந்தது. இதற்கான தள்ளுபடி செலவை 50 : 50 என்ற விகிதத்தில் மாநில மற்றும் மத்திய